பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**05 03 2026 THURSDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** மாநிலங்களவைத் தேர்தலில் தமிழகத்திலிருந்து ஆறு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.

**2)** சுகாதார சேவைகளை மேம்படுத்த இளம் மருத்துவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

**3)** சென்னை உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக, நீதிபதி திரு **Sushrut Aravind Dharmadhikari** நியமிக்கப்பட்டுள்ளார்.

**4)** தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கை காக்க ஆளும் திமுக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

5) உலகக் கோப்பை டிவென்டி - டிவென்டி கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

-இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<>>>>>>

தமிழகம், தெலங்கானா, மேற்குவங்கம் உட்பட பத்து மாநிலங்களிலிருந்து 37 மாநிலங்களவை உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைந்தது.

மனுக்கள் மீதான பரிசீலனை நாளை நடைபெறும்.

வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ள வரும் 9-ஆம் தேதி கடைசி நாளாகும்,

போட்டி இருக்கும் பட்சத்தில் வரும் 16-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும்,

தமிழகத்திலிருந்து திமுக சார்பில் போட்டியிடும் திரு. திருச்சி சிவா, திரு. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ் கட்சியின் திரு. கிறிஸ்டோபர் திலக், தேமுதிகவின் திரு. சுதிஷ் ஆகியோர் இன்று வேட்புமனு தாக்கல் செய்தனர்.

அஇஅதிமுக சார்பில் திரு. தம்பிதுரையும், அக்கூட்டணியில் இடம்பெற்றுள்ள பாமக சார்பில் டாக்டர் அன்புமணி ராமதாஸும் இன்று மனுக்களை தாக்கல் செய்தனர்.

<<<<<<<>>>>>>

நாட்டின் சுகாதார சேவைகளை மேம்படுத்த இளம் மருத்துவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், **26** இளம் மருத்துவர்களுக்கு விருதுகளை வழங்கி அவர் பேசினார்.

நாட்டின் சுகாதாரத் துறையில் செயற்கை நுண்ணறிவு மற்றும் நவீன தொழில்நுட்பம் மூலம் புரட்சிகரமான மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த தொழில்நுட்பத்தின் மூலம் மருத்துவ பரிசோதனை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ள நிலையிலும், நோய் சிகிச்சையில் மருத்துவர்களின் பங்களிப்பு முக்கியமானது என்று திரு ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

சென்னை உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக, நீதிபதி திரு **Sushrut Aravind Dharmadhikari** நியமிக்கப்பட்டுள்ளார்.

தலைமை நீதிபதி திரு **M M** ஸ்ரீவஸ்தவா இன்று ஓய்வுபெற்றதையடுத்து, புதிய நீதிபதியாக கேரள மாநில

உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக பணியாற்றி வரும் திரு **Sushrut Aravind Dharmadhikari-**யை தலைமை நீதிபதியாக நியமித்து மத்திய அரசு இன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

<<<<<<<>>>>>>

தமிழக ஊரகப்பகுதிகளில் ஒன்பதாம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு நடத்தப்பட்ட தமிழ்நாடு ஊரக திறனாய்வு தேர்வில் பெற்றிபெற்றவர்களின் தெரிவுப்பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

சென்னை மாவட்டம் தவிர, தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஊரகப் பள்ளிகளில் பயிலும் ஒன்பதாம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு நடத்தப்பட்ட தேர்வில் வெற்றிபெற்றவர்களின் பட்டியல் கடந்த ஜனவரி மாதம் **20-**ஆம் தேதி அறிவிக்கப்பட்டது.

இதில், **50** மாணவியர் மற்றும் **50** மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு மாநில அரசு சார்பில் ஊக்கத்தொகை வழங்கப்பட உள்ளது.

தமிழ்நாடு ஊரக திறனாய்வு தெரிவு பட்டியலில் உள்ள மாணவ, மாணவியர்களின் பெயர்கள் **dge.tn.gov.in** என்ற அரசு தேர்வுகள் இயக்கக இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கை காக்க ஆளும் திமுக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சிவகங்கை மாவட்டம் இடைக்காட்டூர் கிராமத்தில் ஒன்பது மர்ம நபர்கள் ஆயுதங்களால் பொதுமக்களை தாக்கியுள்ள சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாகவும் கூறியுள்ளார்.

இரண்டு நாட்களுக்கு முன்பு நாங்குநேரி அருகே இதே போன்று ஒரு தாக்குதல் நடந்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஷெட்யூல்டு வகுப்பு மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் இதுபோன்ற தாக்குதல்களை தடுத்து நிறுத்தாமல், சமூக நீதியை காத்து வருவதாக திமுக அரசு கூறி வருவதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி குறை கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் **11**-ஆம் தேதி நடைபெறவுள்ள தேசிய ஜனநாயக கூட்டணியின் மாநாட்டில்

கலந்துகொள்ள தமிழகம் வர உள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், திருச்சியில் மாநாட்டுத் திடலில் நடைபெற்றுவரும் பணிகளை தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகனுடன் இணைந்து நேரில் பார்வையிட்டதாக கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

சென்னை ஆகாஷ்வாணி வளாகத்தில் பெங்களூருவை சேர்ந்த யுனைட்டெட் வே என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் சார்பில் மழைநீரை தேக்கும் வகையில் 14 குழிகளை தோண்டுவதற்கான பூமி பூஜை இன்று நிலைய தலைவர் திரு Ramabhadram Venkatesh தலைமையில் நடைபெற்றது.

இதன்மூலம் ஆகாஷ்வாணி வளாகத்தில் மழை நீர் தேங்கும் பிரச்சினைக்கு தீர்வுகாணப்படுவதோடு நிலத்தடி நீரும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக நிகழ்ச்சி பிரிவு தலைவர் திரு சுதர்சன் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

சென்னை வேளச்சேரி — பரங்கிமலை இடையே பறக்கும் ரயில் சோதனை ஓட்டம் இன்று நடைபெற்றது.

இந்த வழித்தடத்தில் பயணிகள் ரயில் சேவை இன்னும் சில நாட்களில் தொடங்க உள்ள நிலையில் இந்த சோதனை ஓட்டம் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***<u>(Voice Byte — சுரேகா - 51 Sec. )</u>***

<<<<<<<>>>>>>

மதுரை மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில் ஒலிம்பிக் அகாடமியை துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், சர்வதேச போட்டிகளுக்கு தேவையான பயிற்சியை விளையாட்டு வீரர்கள் பெறும் வகையில், உடற்பயிற்சிக் கூடங்கள், உள் அரங்கு மைதானங்கள் இதில் அமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

புதிய உடற்பயிற்சிக்கூடம் ஒன்றும் இதில் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த விளையாட்டு அரங்கில் ஆறு கோடி ரூபாய் மதிப்பிலான கபடி மற்றும் டென்னிஸ் போட்டிகளை ஊக்குவிக்கும் வகையில்,

ஆடுகளம் அமைத்துத் தரப்படும் என்றும் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

சேலம் மாவட்டத்தில் பிரதமரின் சூரியசக்தி மேற்கூரை திட்டத்தின்கீழ், ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் பயன்பெற்று வருகின்றனர்.

இந்த திட்டத்தால், ஆயிரக்கணக்கான வீடுகளில் சூரியசக்தி மேற்கூரைகள் நிறுவப்பட்டு, மின்உற்பத்தி செய்யப்படுகிறது.

இதன்மூலம், பயனடைந்து வருவதாக பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

***(Sound Byte — பயனாளி - 18 Sec. )***

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் சார்பில் கட்டப்பட்டுவரும் கொளத்தூர் நவீன அங்காடி கட்டிடப்பணிகளை மாநில அமைச்சர் திரு சேகர்பாபு இன்று ஆய்வு செய்தார்.

----------------

நாமக்கல் மாவட்டத்தில் அதிக வாக்குப்பதிவு நடைபெறும் வாக்குச்சாவடி மையத்திற்கு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படும் என்று ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி தெரிவித்துள்ளார்.

---------------

வேலூர் மாவட்டம் காட்பாடி அருகே சுமார் 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வேலூர் சுற்றுச்சாலை அமைக்கும் பணிக்கு ஆட்சியர் திருமதி சுப்புலட்சுமி இன்று அடிக்கல் நாட்டினார்.

---------------

வைகை அணையில் வண்ண மீன்கள் உற்பத்தி பண்ணையை தேனி மாவட்ட ஆட்சியர் திரு ரஞ்ஜீத் சிங் இன்று தொடங்கிவைத்தார்.

---------------

அரியலூர் அரசு கலைக்கல்லூரியில் மத்திய விளையாட்டு அமைச்சகத்தின் சார்பில் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி இன்ற நடைபெற்றது.

---------------

பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தலையொட்டி வாக்காளர் கையெழுத்து இயக்கம் இன்று தொடங்கியது.

<<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

உலக கோப்பை டிவென்டி- டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

மும்பையில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

--------------------

**Thionville** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி — ஆஸ்திரியாவின் **Neil Oberleitner** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை **6-4, 6-1** என்ற செட் கணக்கில், இஸ்ரேலின் டேனியல் — அமெரிக்காவின் **Hilderbrand** இணையை வென்றது.

------------

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 7-5, 6-3 என்ற செட் கணக்கில், சீனாவின் Ruien Zhang -ஐ வென்றார்.

**<<<<<<<<END>>>>>>>**